**இலங்கை கணிய மணல் லிமிடட் 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம

இலங்கை கணிய மணல் லிமிடட் ("கம்பனி") 2022 டிசம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர்த்து கம்பனியின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கமைய எனது அபிப்பராயம் முனைப்பழியானது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காயிவின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குற்ப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சியமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணப்பாய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட

கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாராயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்ருபடபதனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்மான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதாணிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதாணிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 ன் 51 வது பந்தியின் படி நிலையான சொத்துக்களின் பயண்தரு ஆயுட்காலமானது ஒவ்வொரு நிதியாண்டிலும் மீள்மதிப்பிட வேண்டும் என்பதுடன் இது கடந்த வருட மதிப்பீட்டுடன் வேறுபடுமாயின் அவ்வேறுபாடு இலங்கை கணக்கீட்டு நியமம் 8 ன் படி கணக்கு வைத்தலும் வேண்டும். முழுமையாக தேய்வடைந்த ஆனால் பாவணையிலுள்ள ரூபா 508,756,403 பெறுமதியான 3,135 நிலையான சொத்து உருப்படிகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையாக தேய்வடைந்த ஆனால் பாவணையிலுள்ள நிலையான சொத்துக்களை மீள்மதிப்பிட வேண்டிய போதிலும் கொவிட்-19 காரணமாக மீள்மதிப்பிடப்படவில்லை . | முழுமையாக தேய்வடைந்த நிலையான சொத்துக்களின் நியாயமான பெறுமதியினை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பல்வேறு குடிமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களினால் கம்பனிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 23 வழக்குகளில் ரூபா 687,000,000 பெறுமதியான 3 வழக்குகளும் யு.எஸ் டொலர் (USD)2,269,119 பெறுமதியானதொரு வழக்கும் நிகழத்தக்க பொறுப்பாகலாமென சட்ட உத்தியேகாத்தரால் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் செலுத்தப்படாத கடனினை அறவீடு செய்வதற்காக அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுதாபனம் மற்றும் இலங்கை பயிரிடல் கூட்டுதாபனம் என்பவற்றிற்கெதிராக முறையே ரூபா 650 மில்லியன் மற்றும் ரூபா 35 மில்லியன் ஆகிய 02 வழக்குகள் கம்பனியினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் 37 ன் 86 மற்றும் 89 பந்தியின் படி மேற்குறிப்பிட்ட வழக்குகள் சம்பந்தமான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 37 ன் படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.<br>அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுதாபனத்திற்காக தொடுக்கப்பட்ட வழக்கும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நியமத்தின் அடிப்படையில் நிகழத்தக்க பொறுப்பு மற்றும் சொத்து தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 தொடக்கம் 2021 செப்தம்பர் 06 வரைக்கும் கம்பனியினால் பெறப்பட்ட 05 அனுமதிப்பத்திரங்கள் ஊடாக கரையோர மற்றும் கரையோர வளங்கள் பாதுகாப்பு தினைக்களத்தினால் தீர்மாணிக்கப்பட்ட மண் பிரமாணத்திற்கு (Cubes) மேலதிகமாக மண் அகழப்பட்ட காரணத்தினால் குறித்த திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 74,583,515 ஆனது நிதிக்கூற்றுக்களில் பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் தீர்மானமெடுப்பதற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளரினால் இவ்வருடம் ஏப்ரல் மாதமளவில் குழு அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செலுத்த வேண்டிய கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியாண்டில் ஏற்பட்ட தொழிற்பாட்டு செலவுகள் ரூபா 4,292,294 செலவுகளாக காட்டப்படுவதற்கு பதிலாக சேமிப்பாக காட்டப்பட்டமையினால் இலாபம் மற்றும் நடைமுறை சொத்து என்பன நிதிக்கூற்றுக்களில் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தது. | முற்பணமாக காட்டப்பட்டிருந்த ரூபா 9,981,272 இனுள் ரூபா 3,516,777 ஆனது 2023ம் ஆண்டில் தீர்கப்பட்டதுடன் இத்தொகையானது 2023ம் அண்டிற்கான பொதியேற்றல் திருத்த மற்றும் ஊழிய சீருடை சம்பந்தமான செலவாக காட்டப்பட்டிருக்கின்றது. | குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதாணிப்பானது 2023ம் ஆண்டிற்கல்லாது 2022ம் ஆண்டிற்குரிய செலவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கடந்த வருட உற்பத்தி மேந்தலை செலவு ரூபா 18,115,382 ஆனது மீளாய்வாண்டில் உற்பத்தி செலவாக காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய உற்பத்தி செலவு ரூபா 2,434,793 ஆனது ஏனைய | 2021 ன் பிற்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூரைல்(Rutile),சிரிகோன்(Zircon) மற்றும் மக்னைட்(Magnatite) பைகளின் | சரியான காலத்திற்குரிய உற்பத்தி மேந்தலை செலவுகள் அடையாளம் |

| | | |
|---|---|---|
| வருமதியாளர்களாக காட்டப்பட்டிருந்தது.இதனால் மீளாய்வாண்டிற்குரிய இலாபம் ரூபா 15,680,589 இனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 2022 விற்ப்பனைக்குரிய செலவு 2021 செலவிலிருந்து வெளியெடுக்கப்பட்டு 2022 இற்குரிய செலவாக காட்டப்படடிருந்தது.மேலும் மேற்குறிப்பிடப்பட்ட பைகள் சம்பந்தமான எஞ்சிய தொகை ரூபா 2,434,793 செலவாக காட்டப்படாது ஏனைய 2022 ல் வருமதியாளர்களாக காட்டப்பட்டிருந்தது. | காணப்பட்டு கணக்கு வைப்பதுடன் எஞ்சிய செலவு இருப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.6 கணக்கீட்டு வருமதிகள் மற்றும் சென்மதிகள்**

**1.6.1 கணக்கீட்டு வருமதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 தொடக்கம் நடப்பாண்டு வரை தீர்க்கப்படாத பெறுமதி சேர் வரி நிலுவை ரூபா 132,923,512 ஏனைய நடைமுறை சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2006 தொடக்கம் 2022 வரை தீர்க்கப்படாத பெறுமதி சேர் வரி நிலுவை ரூபா 132,923,512 னை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் இருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | வரி பெறுவனவுகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 2019-2021 காலப்பகுதியினுள் 28 வழங்குனர்களுக்காக முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 2,172,200 இற்கான கொள்வனவினை செய்து தீர்பதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | முற்பணமாக காட்டப்பட்டிருந்த ரூபா 9,981,272 இனுள் ரூபா 3,516,777 ஆனது 2023ம் ஆண்டில் தீர்கப்பட்டதுடன் இத்தொகையானது 2023ம் அண்டிற்கான செலவாக கவணத்திலெடுக்கப்பட்டிருக்கின்றது. | முற்பணங்களை தீர்பதற்கும் கொள்முதல் நடைமுறையினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டம், கொள்கை மற்றும் முகாமைத்துவ தீர்மானம் என்பவற்றுடன் இணங்காமை.**

| சட்டம்,கொள்கை தொடர்பான குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 16 நவம்பர் 2021ல் பொது நிறுவன சுற்றறிக்கை இல 01/2021னால் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்ப்பாட்டு கையேட்டின் 3.5 ம் பந்தி | அமைச்சரவை அனுமதியின்றி 17 ஒக்டோபர் மற்றும் 29 நவம்பர் 2022 இலிருந்து கம்பனியின் ஊழியர்கள் இருவர் கைத்தொழில் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கான | ஊழியர்கள் குறிப்பிட்ட அமைச்சிற்கு விடுவிக்கப்படடிருந்த போதிலும் ஏனைய ஊழியர்கள் போன்று அவர்களுக்கும் சம்பளம்,மேலதிக நேர கொடுப்பனவு, ஏனையபடி மற்றும் ஊக்கவிப்பு கொடுப்பனவு என்பன செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கைக்கு இணங்க கம்பனியின் ஊழியர்கள் அமைச்சிற்கு விடுவக்கப்பட முடியாதென்பதுடன் அவர்களை திரும்ப பெறுவதுடன் |

| | | |
|---|---|---|
| சம்பளம்,மேலதிக நேர கொடுப்பனவு,ஏனையபடி மற்றும் ஊக்கவிப்பு கொடப்பனவு என ரூபா 439,142 வெலுத்தப்பட்டுமிருந்தது. | | செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளும் அமைச்சிடமிருந்து பெற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 4,931,085,870 ஆன இலாபமாக காணப்பட்டதுடன், அதனோடொத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 1,204,998,407 ஆகும். அதன் பிரகாரம் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 3,726,087,463 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனை செலவு, நிர்வாக செலவு ,ஏனைய தொழிற்ப்பாட்டு செலவு மற்றும் வருமான வரி செலவு என்பன முறையே ரூபா 98,782,091,ரூபா 52,165,517,ரூபா 539,105,920,ரூபா 1,047,351,255 ஆல் அதிகரித்திருந்தது.வருமானம் மற்றும் நிதி வருமானத்தில் முறையே ஏற்ப்பட்ட ரூபா 4,842,627,690 மற்றும் ரூபா 399,009,881 அதிகரிப்பே இவ்வாண்டு ஏற்ப்பட்ட முன்னேற்றத்திற்கு காரனமாக அமைந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கொள்முதல் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வழங்குனர் தெரிவு,செலவு மதீப்பீடு இன்றியும் மற்றும் கொள்முதல் கையேட்டின் நடைமுறைகளை பின்னபற்றாமலும் புல்மோட்டையிலமைந்துள்ள கம்பனியின் தலைவர் வதிவிடம் தனியாள் ஒப்பந்ததாரர் ஒருவரினால் ரூபா 31,598,049 செலவில் 03 பெப்ரவரி 2021 தொடக்கம் 31 டிசம்பர் 2022 வரையான காலப்பகுதியினுள் புனருத்தாபனம் செய்யப்பட்டிருந்தது. | புதிய கட்டிடமொன்றினை கட்டுவதற்கு பாரிய செலவு ஏற்ப்படுமென்ற காரணத்தினால் உள்ளீட்டு பொருட்களை வழங்கி புனருத்தாபனமானது ஓர் அமைப்பு முறையில் செய்யப்பட்ட போதிலும் கொள்முதல் நடைமுறையில் சில குறைபாடுகள் காணப்பட்டது இவ்வறான நிலைமை எதிர்காலத்தில் ஏற்ப்படாது. | செலவு மதீப்பீடு மற்றும் கொள்முதல் கையேட்டின் நடைமுறைகளை பின்னபற்றியே கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வழங்குனர் தெரிவு மேற்க்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் இதற்கமய செயற்படாதவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவேண்டும். |

**3.2 முகாமைத்துவ விணைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 9,831,234 பெறுமதியபான 03 டக் படகுகள் மற்றும் 06 படகு தாங்கிகள என்பன சேதமடைந்து டொக்கியாட் கோட்வே பகுதியில் 26 வருடங்களாக காணப்பட்டதுடன் இதற்குரிய பாதுகாப்பு செலவாக நடப்பாண்டில் ரூபா 2,597,326 செலுத்ப்பட்டிருந்தது. | டக் படகுமற்றும் தாங்கிகளினை விற்பதற்கான கேள்விப்பத்தரம் கோரப்பட்டுள்ளதுடன் டக் படகுமற்றும் படகு தாங்கிகளினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | டக் படகு மற்றும் படகு தாங்கிகளினை விற்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 50% எரிபொருளினை சேமிக்கும் நோக்குடன் தாமதக்கட்டணம் ரூபா 1,164,350 உடன் சேர்த்து ரூபா 43,838,767 இற்கு இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 42,370,234 பெறுமதியான 30 யூன் 2016 ல் இறக்குமதி செய்யப்பட்ட காயவைக்கும் இயந்திரத்தினை(Dryer machine) பொருத்தி பயண்படுத்துவதற்கு புல்மோட்டை தொழிற்ச்சாலையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் இவ்வியந்திரமானது 31 மே 2023 வரைக்கும் பயண்படுத்தப்படாமலிருந்தது. | சேவை வழங்குனர் இயந்திரத்தினை பொருத்துவதற்குரிய பொறுப்பினை எடுக்காத காரணத்தினால் இயக்குணர் சபையின் அனுமதியுடன் ரூபா 2,185,000 செலவில் பொருத்துவதற்கு உறுதியளிக்கப்பட்டு அதற்குரிய வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. | கொள்முதல் தொடர்பில் முறைமையான ஒப்பந்தம் வழங்குனர்களுடன் ஏற்ப்படுத்த வேண்டும் என்பதுடன் இயந்திரத்தினை பொருத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 53,695,105 பெறுமதியான நான்கு வீல் லோடர்ஸ்(Four Wheel loaders), ரூபா 800,000 பெறுமதியான லொறியொன்றும் 5 வருட காலமாக பாவனையின்றி காணப்பட்டதுடன் இதனுள் ரூபா 36,959,917 பெறுமதிறான 2 வீல் லோடர்ஸ்(Wheel loaders) உடனடியாக திருத்தக்கூடிய நிலமையில் காணப்பட்டது. | வீல் லோடர்ஸ்(Wheel loaders) பலமுறை பழுது பார்க்கப்பட்டும் அடிக்கடி மீண்டும் பழுதடைவதால் தற்காலிகமாக செயற்பாடின்றி காணப்படுவதுடன் இது தொடர்பில் எடுக்கப்படகூடிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் உயர் முகாமைத்துவ மட்டத்தில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் லொறியானது நல்ல நிலமையில் இல்லாத காரணத்தினால் செயற்ப்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. | முதடைந்த இயந்திரங்களை திருத்துவதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டு பாவிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவவாறில்லாத இயந்திரங்களை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 19 செப்ரம்பர் 2011 ல் அமப/11/2068/553/018-1 இலக்க அமைச்சரவை அனுமதிக்கிணங்க கம்பனியானது ரூபா 500 மில்லியன் பெறுமதியான தொகையினை லங்கா செராமிக் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஓய்வு திட்டத்தினை நடமுறைப்படுத்துவதற்காக 10 ஜனவரி 2012 | கடன் தொகையானது திறைசேரிக்கு சொந்தமான கம்பனிக்கு வழங்கப்பட்ட காரணத்தினால் இரு அரச முகவர் நிறுவனங்களும் சேர்ந்து வீணான சட்ட நடவடிக்கைளின்றி கணக்ககுளிலிருந்து பதிவழிக்க தீர்மானித்தன.மேலும் இவ் ரூபா 500 மில்லியன் தொகையானது | தொகையினை மீளறவீடு செய்வதற்கு கம்பனியினால் வர்தக நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டவேளையிலும் பதிவழிக்கப்பட்டதால் ஏற்ப்பட்ட நட்டத்திற்கு |

| | | |
|---|---|---|
| ல் அரச வளங்கள் முகாதைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியது.நிதியாண்டு முடிவில் இக்கடன் தொகையானது வட்டியுடன் சேர்த்து ரூபா 517,421,448 ஆக காணப்பட்டதுடன் இதனுள் ரூபா 155,226,434 னை மீளறவீடு செய்வதற்கு கம்பனியினால் வர்தக நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுடன் மிகுதி ரூபா 362,195,014 னை இயக்குணர் சபையின் அனுமதியுடன் கணக்ககுளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | வட்டியுடன் சேர்த்து எதிர்காலத்தில் பெறப்பட்டால் கணக்ககுகளில் சொத்தாக காட்டப்படும். | இயக்குணர் சபையே பொறுப்பு கூறல் வேண்டும். |
| (உ) திறைசேரி செயலாளரினால் 30 மார்ச் 2004 ல் No.පීඊ්/පීඔඊඔ/14/02 இலக்கமிடப்பட்ட கடிதத்திற்கிணங்க கம்பனியின் ஊழியர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 35 உணவுப்படியாகவும் வரவுப்படியாக மாதமொன்றுக்கு ரூபா 500 செலுத்த முடியுமாயினும் இயக்குணர் சபையின் ஒப்புதலுடன் மட்டும் உணவுப்படியினை நாளொன்றுக்கு ரூபா 200 ஆகவும் வரவுப்படியினை மாதமொன்றுக்கு ரூபா 2,000 ஆகவும் அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. இதனால் நிதியாண்டில் ரூபா 6,975,000 மற்றும் ரூபா 42,831,450 னை முறையே வரவுப்படியாகவும், உணவுப்படியாகவும் திறைசேரி அனுமதியின்றி செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்களின் விடுமுறையினை கட்டுப்படுத்தி வரவினை ஊக்கப்படுத்துவதற்காக 1980 இலிருந்து வரவுப்படி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு இயக்குணர் சபையின் ஒப்புதலுடன் செலுத்தப்பட்டு வருகின்றது. திறைசேரி செயலாளரினால் 30 மார்ச் 2004 ல் No.පීඊ්/පීඔඊඔ/14/02 இலக்கமிடப்பட்ட கடிதத்திற்கிணங்க கம்பனியின் ஊழியர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 500 செலுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி அனுமதியின்றி படிகனை அதிகிக்க முடியாதென்பதுடன் திறைசேரி அனுமதியினை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலதிக கொடுப்பனவு சட்டரீதியற்ற செலவாக கவனத்திலெடுக்கப்பட வேண்டும். |

**3.3 தொழிற்ப்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இல අමප/20/0226/224/006/ටීඩීආර් 12 பெப்ரவரி 2020 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க கணியமணலினை அப்படியே ஏற்றுமதி செய்யாமல் பெறுமதி கூட்டப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் ஆனால் 31 மே 2023 வரை இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் கணியமணல் உள்ளீட்டுப்பொருளாகவே ஏற்றுமதி செய்யப்படடிருந்தது. | பல தடவைகள் EOI (கேள்விப்பத்திரம்) மேற்கொள்ளப்பட்ட போதும் அவை தோல்வியடைந்தன. தற்பொழுது புல்மோட்டையில் ஸிரிகோன் பவுடர் இயந்திரத்தினை (Zircon powder machine) நிறுவுவதற்கான கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் ஒரே ஒரு விலை மனு பெறப்பட்டு தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவிடம் (TEC) ஒப்படைக்கப்பட்டு இது தொடர்பிலான திட்டம் தயாரிக்கப்படும். | அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க கணியமணலினை அப்படியே ஏற்றுமதி செய்யாமல் பெறுமதி கூட்டப்பட்டு ஏற்றுமதி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஆ) கணியமணல் அகழ்வு,செயற்ப்படுத்தல், பெறுமதி சேர்த்தல் மற்றும் விற்ப்பனை தொடர்பில் பேன்தகு வகையில் நாட்டிற்கு பொருளாதார நன்மையினை ஏற்ப்படுத்தும் பொருட்டு கம்பனியினால் 2022-2026 காலப்பகுதியில் இலக்கு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கொக்கிளாய் பகுதியில் புதிய இயந்திர தொழிற்ச்சாலையமைப்பதற்கு கம்பனியினால் பல வருடங்களாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இது தொடர்பில் கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) ரூபா 2.25 மில்லியன் பெறுமதியான 17.69 ஹெக்டயர் பரப்பு காணி 13 பெப்ரவரி 2013ல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.இயந்திர தொழிற்ச்சாலை நடவடிக்கைகளை திட்டமிட முன்பு ரூபா 39,339,472 பெறுமதியான சுழற்ச்சி இயந்திரம்(Spiral Machine) கொள்வனவு செய்யப்பட்டு புல்மோட்டை தொழிற்ச்சாலையில் பயண்பாடின்றி வைக்கப்பட்டிருந்தது. | கொக்கிளாய் பகுதிக்காண அனுமதியினை விரைவாக பெறும் எதிர்பார்ப்புடன் இவ்வியந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. ஆனபோதும் இவ் அனுமதியினை பெற பல வருடங்களானது.2021ம் ஆண்டில் அனுமதி கிடைக்கப்பெற்றதும் அப்பகுதியில் ஆரம்ப நடவடிக்கைள் தொடங்கப்பட்டு அகழ்வு செய்யப்பட்ட மணலிருப்பு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. | கொக்கிளாய் செயற்றிட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டுமென்பதுடன் சரியான திட்டமிடலின்றி இயந்திரம் கொள்வனவு செய்தவர்களுக்கெதிராகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டு முடிவுவரை இயந்திர தொழிற்ச்சாலையின் வேலைகள் ஆரம்பிக்கப்படாத போதிலும் 2015 ம் ஆண்டு 117 ஊழியர்கள் வேலைக்கமர்தப்பட்டதுடன் நிதியாண்டின் போது இவர்களுக்குரிய சம்பளமாக ரூபா 107,100,479 செலுத்தப்பட்டிருந்தது. | கொக்கிளாய் தொழிற்ச்சாலை தொடங்குவதற்கு முன்பு பயிற்ச்சியளிக்கும் நோக்குடன் ஊழியர்கள் புல்மோட்டை தொழிற்ச்சாலையில் வேலைக்கமர்தப்பட்டதுடன் இதனை தொடர்ந்து ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு பதிலாக நீண்ட கால அடிப்படையில் அவர்கள் உள்ளீர்கப்படுட்ள்ளனர்.ஆகவே ஊழியர்கள் விரயமாக்கப்படவில்லை. | செயற்றிட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன் ஊழியர்களிடமிருந்து ஆகக்கூடிய சேவை பெறப்பட வேண்டும். |
| (iii) கொக்கிளாய் தொடக்கம் கொக்குதொடுவாய் வரையுள்ள கரையோரப்பகுதியில் 30,000 மண் கியூப்ஸ் மண்ணகழ்வினை மேற்கொள்வதற்காக கம்பனியினால் 12 | நாட்டில் காணப்பட்ட சிக்கல் நிலை காரணமாக அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட மண் பிரமாணத்தினை கம்பனியினால் அகழ முடியாமல் போனது. | மண் அகழ்வு அனுமதிப்பத்திரத்தினை புதுப்பித்து மண்ணகழ்வினை விணைத்திறனா |

| | | |
|---|---|---|
| ஓகஸ்ர் 2021 ல் கரையோர பாதுகாப்பு திணைக்களத்திற்கு ரூபா 15,000,000 செலுத்தி இலக்கம் P/21/90 அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் ஓகஸ்ர் 11 இரத்து செய்யப்பட்டிருந்தது. .இது தொடர்பில் 3,520 மண் கியூப்ஸ்(Cubes) மட்டுமே அகழப்பட்டிருந்ததுடன் இது பயண்படுத்தப்படாமலுமிருந்தது. | | மேற்கொள்தற்குரிய முயற்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) கம்பனியினால் கொக்கிளாய் தொடக்கம் கொக்குதொடுவாய் வரையுள்ள கரையோரப்பகுதியில் புணருத்தாபன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமலும் கரையோர பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்கப்படாமலுமிருந்ததுடன் இப்பகுதியிலுள்ள 1.9621 ஹெக்டயர் பரப்பில் அகழ்வினை மேற்கொள்ள 2022 யூலை 01 கோரப்பட்ட அனுமதிப்பத்திரம் கம்பனிக்கு வழங்கப்படவில்லை. | பதில் கிடைக்கப்பெறவில்லை. | அகழ்வு பகுதியில் புணருத்தாபன நடவடிக்கைகள் முடிக்கப்பட வேண்டுமென்பதுடன் கரையோர பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) கம்பனியின் சுரங்க மற்றும் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) கம்பனியானது 2028 ஆண்டு வரயான 10 வருட காலத்திற்கு 03 அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பதுடன் இதைத்தாண்டி புடவைகடகட்டுப்பகுதியில் நிதியாண்டின் மார்ச் தொடக்கம் யூன் வரை மட்டுமே அகழ்வு பணியினை மேற்க்கொண்டு 12,229 மெற்றிக் டொன் மண்ணினையும் தேவிக்கல்லு பகுதியில் நிதியாண்டு ஜனவரியில் மட்டுமே அகழ்வு பணியினை மேற்க்கொண்டு 19,433 மெற்றிக் டொன் மண்ணினையும் அகழ்ந்திருந்தது. ஆகவே கம்பனியின் அகழ்வு நடவடிக்கைகளானது பெரும்பாலும் புல்மோட்டை பகுதியிலேயே சார்ந்துள்ளது. | நாட்டின் மோசமான நிலமை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக புல்மோட்டை பகுதியில் அகழ்வு பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் இது வெகு விரைவில் மீள ஆரம்பிக்க எதிர்பார்க்ப்படுகின்றது. தேவிக்கல்லு பகுதியில் முழுமையாக அகழ்வு பணி மேற்க்கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது. | புடவைக்கட்டு மற்றும் தேவிக்கல்லு பகுதிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை விணைத்திறனாக பயணபடுத்தி அகழ்வு பணிகள் மேற்க்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) அடுத்த 20 வருடத்திற்கான அகழ்வு திட்டமின்மை,தற்போதுள்ள அனுமதிப்பத்திரங்களை முறையாக பயண்படுத்தாமை மற்றும் தற்போதுள்ள அனுமதிப்பத்திரங்கள் எதிர்வரும் 20 வருட தொழிற்ப்பாட்டிற்கு போதாத | பதில் கிடைக்கப்பெறவில்லை. | அகழ்வு திட்டம் தயாரிக்கப்பட்டு அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காரணத்தினாலும் கம்பனியினால் கோரப்படடிருந்த 07 புதிய அனுமதிப்பத்திரங்கள் புவிச்சரிதவியல்,அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் வழங்கப்படவில்லை. மேலும் வனத்திணைக்களத்திற்கு சொந்தமான கொக்கிளாய் ஆற்றுப்பகுதியின் நாயாறு செம்மலை பகுதியில் மண்ணகழ்வினை மேற்கொள்ள வழங்கப்பட்டிருந்த இல.EL/406 கொண்ட அனுமதிப்பத்திரம் 31 டிசம்பர் 2022ல் இரத்து செய்யப்பட்டிருந்தது.இக்காரணங்களினால் 31 மே 2023 வரை கம்பனியிடம் எவ்வித அகழ்வு அனுமதிப்பத்திரங்களும் இருக்கவில்லை. | | |
| (iii) 2028 இற்குப்பிறகு கம்பனயிடமுள்ள அனைத்து அனுமதிப்பத்திரங்களும் செல்லுபடியற்றதாவதுடன் எவ்வித புது அகழ்வு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவில்லை.இதன் காரணமாக கம்பனியின் தொழிற்ப்பாடு குறைவடைவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. | பதில் கிடைக்கப்பெறவில்லை. | எதிர்கால அகழ்வு நடவடிக்கைகளில் அதிக கவணம் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் முறைமையான செயற்றிட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 மனிதவள முகாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகளுக்கு வேறுபட்டு இடைமட்ட முகாமைக்குட்பட்ட (MM) விற்பனை முகாமையாளர், இராசயணவியாளர் ஆகிய இருவருக்கு உயர்மட்ட முகாமைக்குட்பட்ட (HM) சம்பள படியான ரூபா 120,175 செலுத்தப்பட்டிருந்ததுடன் கீழ் மட்ட முகாமைக்குட்பட்ட (JM) ஓர் நிருவாக அதிகாரிக்கு உயர்மட்ட முகாமைக்குட்பட்ட (HM) சம்பள படியான ரூபா 105,760 செலுத்தப்பட்டிருந்தது.மேலும் கீழ் மட்ட முகாமைக்குட்பட்ட (JM) இரு உள்ளக கணக்காய்வு அதிகாரிகள,ஓர் வழங்கல் அதிகாரி மற்றும் ஓர் கணக்கீட்டு | ஏதிர்காலத்தில் இது தொடர்பில் கைத்தொழில் அமைச்சினால் குழு அமைக்கப்பட்டு விசாரனைகள் முன்னெடுக்கப்படும். | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகளுக்கு வேறுபட்டு ஊழிய ஆட்சேர்ப்போ ஊழியர்களுக்கு சம்பளமோ செலுத்தப்பட கூடாதென்பதுடன் இதற்க்கு மாறாக செலுத்தப்பட்ட மிகைத்தொகையினை மீளப்பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

அதிகாரி ஆகிய 03 பதவிக்கு இடைமட்ட முகாமைக்குட்பட்ட (MM) சம்பள படிநிலையான முறையே ரூபா 71,050,ரூபா 72,425,ரூபா 71,050 மற்றும் ரூபா 69,675 ஆகிய தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிதகமை மற்றும் நல்லாட்சி

### 4.1 வரவுச்செலவு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீடப்பட்ட இல்மனைட்,ஹைற.டை.இல்மனைட ,ரூடைல மற்றும் சிர்கோன் உற்ப்பத்தி முறையே 66,250Mt, 6,250Mt,4,100Mt, மற்றும் 1,250Mt ஆகவிருந்தது ஆனால் இது தொடர்பிலான உண்மை உற்ப்பத்தி முறையே 29,741Mt, 1,751MT, 741Mt மற்றும் 268Mt ஆகவுமிருந்தது. இதனால் கம்பனியின் உண்மை உற்ப்பத்தி எதிர்பார்கப்பட்ட உற்ப்பத்தியுடன் 45,349Mt அல்லது 58 வீதத்தினால் குறைவாகவிருந்தது. | நிதியாண்டின் மார்ச் தொடக்கம் செப்ரம்பர் வரையேற்ப்பட்ட எரி பொருள் பற்றாக்குறை காரணமாக கம்பனியின் மின்பிறப்பாக்கியினை தொடச்சியாக செயற்ப்படுத்த முடியாமையினால் 2022ல் கம்பனியின் உற்ப்பத்தி 57 %னால் குறைவடைந்திருந்தது. | தீர்மானணிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு மாற்று வழிகளை கையாள வேண்டும். |